Vaccinate WA

# அனைத்து வயதினருக்குமான கோவிட்-19 தடுப்பூசி பூஸ்டர் டோஸ்கள் வழிமுறைக் கையேடு



தீவிர நோய்ப்பாதிப்பு, மருத்துவமனையில் அனுமதிக்கப்படுதல் மற்றும் கோவிட்-19 காரணமாக இறப்பு ஆகியவற்றில் இருந்து உங்களையும் பிறரையும் பாதுகாக்க, கோவிட்-19 தடுப்பூசியின் முதன்மை தடுப்பூசித் தொடரை நீங்களோ அல்லது உங்கள் குழந்தையோ பெற்றிருப்பீர்கள். கோவிட்-19 தடுப்பூசிகள் ஆற்றல் வாய்ந்ததாக இருந்தாலும் கூட, காலப்போக்கில் அதன் பாதுகாப்பு குறைந்துவிடும்.

## *இப்பொழுது, பூஸ்டர் எடுத்துக்கொள்வதே இந்தப் பாதுகாப்பைத் தொடர்ந்து பெற்றிட சிறந்த வழியாகும்.*

நீங்கள் அல்லது உங்கள் குழந்தை கோவிட்-19 தடுப்பூசியின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பூஸ்டர் டோஸ்களுக்குத் தகுதி பெற்றவரா என்பதை அறிய கீழே உள்ள அட்டவணையைப் பாருங்கள்.*

| | யாரெல்லாம் தகுதிபெற்றவர்கள்? | நான் எப்பொழுது பூஸ்டர் டோஸ் செலுத்திக் கொள்ள வேண்டும்? | நான் இரண்டாவது பூஸ்டர் டோஸ் செலுத்திக் கொள்ளலாமா? | எந்த பூஸ்டர்? |
|---|---|---|---|---|
| *நீங்கள்* **Pfizer** *பெற்றிருந்தால்...* | **5+** வயதுடையவர்களின் பூஸ்டர் டோஸ் புதுப்பித்த நிலையில் இருக்க வேண்டும். | முதன்மை Pfizer தடுப்பூசித் தொடர் செலுத்திய பிறகு குறைந்தது **5 மாதங்கள்** ஆகி இருக்க வேண்டும் | 50+ அனைவரும் 1 ஆவது பூஸ்டர் பெற்று குறைந்தது **4 மாதங்களுக்குப்** பிறகு 2 ஆம் பூஸ்டரைப் பெற வேண்டும். | **18+ வயது வந்தவர்கள்** எந்த mRNA கோவிட்-19 தடுப்பூசியின் பூஸ்டர் டோஸையும் பெறலாம். **5-17 வயது குழந்தைகள்** Pfizer பூஸ்டர் பெறவேண்டும். |
| *நீங்கள்* **Moderna** *பெற்றிருந்தால்...* | **18+** உள்ள வயதுடையவர்களின் பூஸ்டர் டோஸ் புதுப்பித்த நிலையில் இருக்க வேண்டும். | முதன்மை Moderna தடுப்பூசித் தொடர் செலுத்திய பிறகு குறைந்தது **5 மாதங்கள்** ஆகி இருக்க வேண்டும் | 50+ அனைவரும் 1 ஆவது பூஸ்டர் பெற்று குறைந்தது **4 மாதங்களுக்குப்** பிறகு 2 ஆம் பூஸ்டர் பெற வேண்டும். | எந்த mRNA கோவிட் -19 தடுப்பூசியின் பூஸ்டர் டோஸையும் பெறலாம். |
| *நீங்கள்* **Johnson & Johnson** *பெற்றிருந்தால்:* | **18+** வயதுடையவர்களின் பூஸ்டர் டோஸ் புதுப்பித்த நிலையில் இருக்க வேண்டும். | முதன்மை J&J தடுப்பூசி செலுத்திய பிறகு குறைந்தது **2 மாதங்கள்** ஆகி இருக்க வேண்டும். | தங்கள் முதன்மை மற்றும் பூஸ்டர் டோஸாக J&J தடுப்பூசி பெற்ற 50+ அனைவரும் 1 ஆவது பூஸ்டர் பெற்று குறைந்தது **4 மாதங்களுக்குப்** பிறகு 2 ஆம் பூஸ்டர் பெறவேண்டும். | J&J ஐ 1 ஆவது பூஸ்டராகப் பெற்றால் எந்த mRNA தடுப்பூசியின் பூஸ்டர் டோஸும் பெறலாம். 2 ஆம் பூஸ்டர் ஏதாவது ஒரு mRNA கோவிட்-19 தடுப்பூசியாக இருக்க வேண்டும். |
| *நீங்கள்* **Novavax** *பெற்றிருந்தால்* | நீங்கள் முதன்மைத் தொடரில் Novavax ஐப் பெற்றிருந்தால், இந்த சமயத்தில் வேறெந்த பிராண்டின் பூஸ்டர் டோஸுக்கும் தகுதிபெற மாட்டீர்கள். | | | |

*நீங்கள் மிதமான அல்லது நோயெதிர்ப்புக் குறைபாடு கொண்டவர் என்றால், வழிகாட்டுதல்கள் மாறுபடும்.*

*சமீபத்தில் SARS-CoV-2 நோய்த்தொற்று பெற்றவர்கள், ***அறிகுறிகள் ஆரம்பித்த நாள் அல்லது பாசிடிவ் என சோதனையில் கண்டறியப்பட்ட நாளில் (நோய்த்தொற்று அறிகுறிகள் எதுவுமின்றி இருந்தால்) இருந்து 3 மாதங்கள் தள்ளி தங்கள் முதல் அல்லது இரண்டாவது கோவிட்-19 தடுப்பூசி பூஸ்டர் டோஸ் பெறுவதைக் கருத்தில் கொள்ளலாம்.*** நோய்த்தொற்று மற்றும் தடுப்பூசி எடுத்துக்கொள்ளுதல் இரண்டிற்கும் இடையே அதிகரித்த காலம் இருந்தால், தடுப்பூசியினால் ஏற்படும் நோயெதிர்ப்பு சக்தி மேம்படலாம் என்று *ஆய்வுகள் கூறுகின்றன* (ஆங்கிலத்தில்). மேலும், நோய்த்தொற்று ஏற்பட்ட சில வாரங்கள் முதல் மாதங்கள் வரை மீண்டும் தொற்று ஏற்படும் ஆபத்து குறைவாக உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. நோய்த்தொற்றுக்குப் பிறகு பூஸ்டர் டோஸ் பெறுவதைத் தாமதப்படுத்த வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க தனிப்பட்ட காரணிகளான கோவிட்-19 *தீவிர நோய்ப்பாதிப்பு ஆபத்து* (ஆங்கிலத்தில்), *கோவிட்-19 சமூக அளவு* (ஆங்கிலத்தில்) அல்லது ஆளுமைமிக்க SARS-CoV-2 திரிபின் பண்புகள் ஆகியவை கணக்கில் கொள்ளவேண்டும்.

# கோவிட்-19 தடுப்பூசி பூஸ்டர் டோஸ்கள் பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## பூஸ்டர் டோஸ்கள் ஏன் முக்கியமானவை?

தீவிர நோய்ப்பாதிப்பில் இருந்து தொடர் பாதுகாப்பை வழங்க பூஸ்டர் டோஸ்கள் உதவும். தீவிர கோவிட்-19 பாதிப்பு ஏற்படும் அபாயம் அதிகம் உள்ளவர்களுக்கு மட்டுமே முன்பு பூஸ்டர் டோஸ்கள் பரிந்துரைக்கப்பட்டு வந்தன, ஆனால், கோவிட்-19 நோய்க்கு எதிரானப் பாதுகாப்பை அதிகரிக்கும் பொருட்டு Pfizer முதன்மைத் தொடரைப் பெற்ற 5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினருக்கும் பரிந்துரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மிதமான முதல் தீவிர நோயெதிர்ப்பு சக்தி குறைபாடுள்ள சிலருக்கு நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க கூடுதல் டோஸ்கள் தேவைப்படலாம். அமெரிக்கா முழுவதும் தீவிரமாக பரவும் அதிக தொற்றுத்தன்மையுடைய திரிபுகளாலும் கோவிட்-19 நோயாளிகள் அதிகரித்து வருவதாலும் இது மிகவும் முக்கியமானதாக உள்ளது.

## பூஸ்டர் டோஸ் தேவைப்படுமானால், தடுப்பூசிகள் வேலை செய்யவில்லை என்று அர்த்தமா?

இல்லை. அமெரிக்காவில் நம்மிடம் உள்ள தற்போதைய கோவிட்-19 தடுப்பூசிகள், கடுமையான நோய் பாதிப்புகள், மருத்துவமனையில் சேர்க்கப்படுதல், மரணம், மற்றும் மாறுபட்ட திரிபுகளுக்கு எதிராகவும் சிறப்பாகச் செயல்படுகின்றன. இருப்பினும், பொது சுகாதார வல்லுநர்கள் குறிப்பாக அதிக ஆபத்துள்ள மக்களிடையே கோவிட்-19 இன் லேசான மற்றும் மிதமான நோய்க்கு எதிரான பாதுகாப்பு குறைந்துவருவதை பார்க்கிறார்கள்.

## ஒரு பூஸ்டர் டோஸ் சந்திப்பிற்கு நான் என்ன கொண்டு வரவேண்டும்?

*பூஸ்டர் டோஸ் சந்திப்பிற்கு, தயவுசெய்து உங்கள்/உங்கள் குழந்தையின் தடுப்பூசி அட்டையை கொண்டு செல்லுங்கள்* இதன் மூலம் முதன்மை தடுப்பூசித் தொடரை நிறைவு செய்துள்ளீர்கள் என்பதை வழங்குநர் உறுதிப்படுத்த முடியும். உங்கள் அட்டை தொலைந்துவிட்டது என்றால், வழங்குநர் உங்கள் பதிவைத் தேடிப் பார்க்கலாம்.

## கூடுதல் தடுப்பூசி டோஸுக்கும் பூஸ்டர் டோஸுக்கும் என்ன வித்தியாசம்?

2-டோஸ் mRNA தடுப்பூசி தொடரை (Pfizer அல்லது Moderna) செலுத்தியிருந்தும், போதுமான வலுவான நோய் எதிர்ப்பு சக்தி இல்லாத நோயெதிர்ப்பு சக்தி குறைபாடுள்ள நோயாளிகள் கூடுதல் டோஸை செலுதத வேண்டும்.

முதன்மைத் தடுப்பூசித் தொடரின் பாதுகாப்புத் தன்மை காலப்போக்கில் நலிவடைந்தவுடன் பாதுகாப்பு மற்றும்/அல்லது நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க அல்லது மீட்க பூஸ்டர் டோஸ் கொடுக்கப்படுகிறது.

## பூஸ்டர் டோஸ் செலுத்துவதற்கு தடுப்பூசியின் பிராண்டு முக்கியமா?

நீங்கள் 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருந்து, உங்கள் முதன்மைத் தொடருக்கு Johnson & Johnson அல்லது 2 டோஸ்கள் mRNA தடுப்பூசியைப் பெற்றிருந்தால், உங்கள் முதன்மைத் தொடரில் நீங்கள் பெற்ற அதே தடுப்பூசி அல்லாமல் பூஸ்டர் டோஸுக்கு வேறு தடுப்பூசியையும் பெறலாம். Centers for Disease Control and Prevention (CDC, நோய் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு மையங்கள்) ஆனது சமீபத்திய தரவுகளை (Moderna, Johnson & Johnson, கலந்த பூஸ்டர்கள்) கவனமாக மதிப்பாய்வு செய்து மற்றும் பூஸ்டர் ஊசிகள் பற்றிய வலுவான மற்றும் தர்க்கரீதியான விவாதத்தை மேற்கொண்ட பின் இந்த முடிவை எடுத்துள்ளது. தற்போது Novavax க்கானப் பரிந்துரைக்கப்பட்ட பூஸ்டர் எதுவுமில்லை மேலும் Novavax ஐ மற்ற கோவிட்-19 தடுப்பூசிகளுடன் கலக்கவோ அல்லது பொருத்தவோ கூடாது. ***Pfizer முதன்மைத் தொடரைப் பெற்ற 17 வயது மற்றும் அதற்கு இளையவர்கள், தங்கள் பூஸ்டர் டோஸாக Pfizer தடுப்பூசியை மட்டுமே பெறலாம்.***

## எப்பொழுது ஒருவர் முழுமையாக தடுப்பூசி பெறப்பட்டவராகக் கருதப்படுகிறார்?

நீங்கள் அல்லது உங்கள் குழந்தை உங்களது கோவிட்-19 தடுப்பூசியின் முதன்மைத் தொடரில் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து டோஸ்களையும் செலுத்திக் கொண்ட 2 வாரங்களுக்குப் பிறகு **முழுமையாகத் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர் ஆவீர்கள்** .

நீங்கள் தகுதி பெற்று, முதன்மைத் தொடரில் உள்ள அனைத்து டோஸ்கள் மற்றும் *அனைத்து பரிந்துரைக்கப்பட்ட பூஸ்டர்களையும்* (ஆங்கிலத்தில்) பெற்றிருந்தால், நீங்கள் அல்லது உங்கள் குழந்தை கோவிட்-19 தடுப்பூசியில் **புதுப்பித்த நிலையில்** உள்ளீர்கள் என்று அர்த்தம்.

## ஃப்ளூ போன்ற பிற தடுப்பூசிகளுடன் சேர்த்து பூஸ்டரையும் செலுத்திக் கொள்ளலாமா?

ஆம். நீங்களோ உங்கள் குழந்தையோ பிற தடுப்பூசி பெறும் அதே நேரத்தில் கோவிட்-19 தடுப்பூசியும் பெறலாம். உங்கள் குழந்தைக்கு பள்ளிகளால் வலியுறுத்தப்படும் *தேவையான தடுப்பூசிகள்* (ஆங்கிலத்தில்) அல்லது பரிந்துரைக்கப்பட்ட பிற தடுப்பூசிகள் செலுத்திக்கொள்ள திட்டமிட்ட நேரத்தை கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொள்வதற்காக திட்டமிட்ட நேரத்திலிருந்து தனித்தனியாக நீங்கள் மாற்றத் தேவையில்லை. கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொள்ள திட்டமிட்ட நேரம் உங்கள் குழந்தைக்கு பரிந்துரைக்கப்பட்ட அனைத்து தடுப்பூசிகளையும் பெறுவதற்கான மற்றொரு வாய்ப்பாகும்.

**மேலும் கேள்விகள் உள்ளதா?**
இங்கே செல்லவும்:
***doh.wa.gov/covidbooster***

DOH 825-039 July 2022 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

Washington State Department of Health